668

ஸ்ரீ:

இரட்டைமணிமாலை

நவமணிமாலை

OFFICE OF ... REGISTRAR ... 19 NOV 19.. MADR..

இவை

ஆண்டிபட்டி ஸமஸ்தானதிபதியும்

மதுரைத்தமிழ்ச்சங்க உபாக்கிராஸனாதிபதியுமாகிய

பெருங்கொடைவள்ளல்

ஸ்ரீமான்-பெத்தாச்சிசெட்டியாரவர்கள்

விஷயமாய்

பண்டிதர் பாலஸரஸ்வதி

P. R. கிருஷ்ணமாசாரியர் அவர்களால்

பாடப்பெற்று

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

1920.

O,1MKR2,I
N20.
172538.

ஸ்ரீ:

இரட்டைமணிமாலை

நவமணிமாலை.

இவை

ஆண்டிபட்டி ஸமஸ்தானாதிபதியும்

மதுரைத்தமிழ்ச்சங்க உபாக்கிராஸனாதிபதியுமாகிய

பெருங்கொடைவள்ளல்

ஸ்ரீமான்-பெத்தாச்சிசெட்டியாரவர்கள்

விஷயமாய்

பண்டிதர் பாலஸரஸ்வதி

P. R. கிருஷ்ணமாசாரியர் அவர்களால்

பாடப்பெற்று

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

1920.

ஸ்ரீ:

சிறப்புப்பாயிரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும்

திருவாவடுதுறை யாதீனவித்வானுமாகிய

ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்

இயற்றியது.

மாப்புகழ்சேர் பெத்தாச்சி மன்னவனுக் கிரட்டைமணி மாலை தன்னை
மீப்புலவர்க் கமுதளித்த மால்போல மதிப்பரவை மேன் மதித்துப்
பூப்புலவர்க் கமுதமெனத் தந்தனனாற் கண்ணனென்றே புகனன் னீதி
நாப்புகலுங் கிருட்டிணமா சாரியெனப் பெயர்கொண்ட நல்லோன் றானே.

ஸ்ரீ:

இரட்டைமணிமாலை.

காப்பு.

கவியை மதியா மாவலிபாற் கனமெய் குன்றி யிரந்தடியாற்
புவியை யளந்த வொருமாலைப் போற்றி யிரட்டை மணிமாலை
கவியை மதித்து வருமெளிய கற்றோர் தருக்கத் தருகையினாற்
புவியை யளந்த பெத்தாசசிப் பூமான் றனக்குப் புனைகுவனே.

கவி - சுக்கிரன், செய்யுள்.

நூல்.

வெண்பா.

பொன்பூத்த வாழ்க்கைப் புரவலன்பெத் தாச்சிநம்மைத்
தென்பூத்த தென்னூரிற் சீருதவி—மன்பூத்த
கானாடு காத்தானிற் காத்துக் கருவூரில்
தானாளும் வைத்தருள்வான் சார்ந்து. (1)

பெத்தாச்சியாய்க் கருவூரில்வைத்தருளி, புரவலனாய்க் கானாடுகாத்தானிற்காத்து, பொன்பூத்த வாழ்க்கையனாய்த் தென்னூரிற்சீருதவுவான் என நயங்காண்க.

கட்டளைக்கலித்துறை.

சாரும் புலவரைத் தானெதிர் கொண்டு தவிசளித்துப்
பேரும் வினவா துதவுபெத் தாச்சி பெருங்கொடைக்குக்
காருந் தருவு முவமேய மாமென்று கட்டுரைக்கச்
சேரும் பரிசுள வோதரந் தேருநற் சீரியரே. (2)

வெண்பா.

சீரார் கவிபாடிச் செல்வம் பெறுதற்குப்
பேரார் பெருமானெம் பெத்தாச்சித்—தாரார்
புருடனிட மாகப் புகும்போ தெவர்க்குங்
கருடனிட மாகுமே காண். (3)

கட்டளைக்கலித்துறை.

காணத் தனபதி போல்கின்ற யானுங் கலிமிகுத்த
பாணக் குலத்தவன் சென்றுபெத் தாச்சியைப் பாடியிந்த
மாணப் பெரிய வரிசைபெற் றேனவன் வஞ்சிசென்றால்
பூணத் தருவ னுனக்குமவ் வள்ளற் புரந்தரனே. (4)

வெண்பா.

புரப்பா ரிலராகிப் பூவிடத்தே யெங்கு
மிரப்பார் பலராய வின்நாள்—சுரப்பாரும்
ஆநிலையிற் பாவலவர்க் கன்போ டமுதளிப்போன்
ஆநிலையிற் பெத்தாச்சி யாம். (5)

ஆநிலை - ஆவின் நிலை. ஆநிலை - கருவூர்.

கட்டளைக்கலித்துறை.

பெத்தாச்சி யாமப் பெயருனக் கேதகும் பெற்றமக்கள்
குத்தாச்சி யென்னவுண் பிப்பருன் போன்றார்க் குழந்தைகட்கும்
மத்தாச்சி மாதர் கடைவெண்ணெய் பாலுறி வைத்ததயிர்
மெத்தாச்சி யம்பெறு மன்னமெத் தாயர் மிசைவிப்பரே, (6)

குத்து - க்ஷுத்து, பசி. ஆச்சி - ஆய்ச்சியென்பதன் மரூஉ. ஆச்சியம் - நெய்,

வெண்பா.

மிசையும் பொருளொன்றே வேந்தன்பெத் தாச்சி
இசையும் பொருளுள்ள வெல்லாம்—நசையிற்
கெடாமற் கொடுத்திட்டான் கீர்த்தியினை யார்க்குங்
கொடாமற் றனக்கெனவே கொண்டு. (7)

கட்டளைக்கலித்துறை.

கொண்டு விலைசெய் குலத்திற் பிறந்த குணமுநின்பாற்
கண்டு கொளத்திருப் பெத்தாச்சி நீயுட் கனிந்தெளியர்க்
குண்டு புனையத் தருவதந் திவ்வுல குள்ளமட்டும்
மண்டு புகழ்புண் ணியங்கள்கொண் டாய்நல்ல வாணிபமே, (8)

வெண்பா.

மேவுஞ்சீர்க் கம்பர்க்கு வெண்ணெய்ச் சடையன்போற்
பாவுஞ்சீர்ப் பெத்தாச்சி பாங்கமைந்தே—தாவுஞ்சீர்ப்
பேறுடையா னென்றென்னைப் பேச வெனக்களித்தான்
சோறுடையான் கேளாமற் சூழ்ந்து. (9)

கட்டளைக்கலித்துறை.

கேளுற்ற நேயனிங் கோரிக்கு நேர்சொனற் கீர்த்தியனாய்
நீளுற்ற பாரிவண் காரியை வென்று நிறுத்தியசீர்
ஆளுற்ற நம்பிபெத் தாச்சியுள் ளன்பி னதிகனள்ளி
வேளுற்ற செல்வநம் பேகனெனன் றேதரு மெய்ம்மையிதே. (10)

இச்செய்யுளில் ஓரி, ஆய், பாரி, காரி, அதிகன், நள்ளி, பேகன் என்னும் ஏழுவள்ளல்களின்பெயரும் வந்திருத்தலை அறிக. இக்கு-கரும்பு. பார் இவண் என்றும், கார் இயைவு என்றும் பிரிக்க. வேளுற்றசெல்வத்தை அள்ளி, நம்பு ஏகனென்றே தரும் என்க. தரும்-தருவான். இனி, இச்செய்யுளுக்கு, ஓரிக்குநேராகச்சொல்லத்தக்க கீர்த்தியனும், ஆய்போன்றவனும், பெருமைபெற்ற பாரியையும் காரியையும் வென்று, அதனால் நிறுத்தப்பட்ட சிறப்புக்களை ஆளுதலுற்ற நம்பியாயுமுள்ள பெத்தாச்சி, உள்ளன்பிலே அதிகனையும் நள்ளியையும் ஒப்பான், வேளுற்ற செல்வத்தை நமது பேகனைப்போல அளிப்பான் என மற்றொரு பொருளுந் தோன்றுமாறு காண்க.

வெண்பா.

மெய்கூசிக் கைவிரித்து மெல்ல நகைகாட்டிப்
பொய்கூறிப் போற்றிப் புகழ்ந்திலேன்—நெய்கூரும்
போசனந்தந் தோர்கடகம் பூட்டியபெத் தாச்சியெனும்
போசனையான் சென்றிரந்த போது. (11)

கட்டளைக்கலித்துறை.

போதும் புராணக் கடையினைக் கட்டுமிப் போதுமக்குக்
காதுங் கொடோம்புல வீருமை யாம்பின்பு காண்டுமென
வாதும் புரட்டும் பலசொலும் வச்சைதம் வார்த்தைவிதம்
ஏதுஞ் சொலாதுபெத் தாச்சியெல் லாந்தரு மெந்தமக்கே. (12)

வச்சை - உலோபி.

வெண்பா.

தமக்கே தருமென்பர் சங்கீதம் வல்லார்
நமக்கே தருமென்பர் நல்லோர்—எமக்கே
தருமென் றிருப்பர் தமிழ்வலர்பெத் தாச்சித்
தருமன் றருமமிது தான். (13)

கட்டளைக்கலித்துறை.

தானந் தரும்பெருஞ் செல்வப்பெத் தாச்சியைத் தாமுணர்ந்தால்
ஈனங் கெடக்*கொடுப் பாரில்லை †செல்வரிப் போதில்லையென்
றூனந் தவிர்த்த சடகோப ரப்பரென் றோதுகின்ற
ஞானங் கனிந்தவந் நாவீ றுடையர் நவிலுவரோ.‡ (14)

வெண்பா.

நவிலப் பயனளிக்கு நன்னூல்போ னண்பாய்ப்
பயிலப் பயனளிக்கும் பண்பா!– புவியில்
கரப்பிலா நெஞ்சிற் கனமுணர்பெத் தாச்சி!
இரப்புமோ ரேருன் னிடத்து. (15)

கட்டளைக்கலித்துறை.

இடாதவ ராகியுண் ணுதவ ராகி யிடையினன்றாய்
உடாதவ ராகிய லோபரை யிட்டுண் டுடுக்கவைத்துத்
தடாதவ ராகித் தரும்பெருஞ் செல்வர்க டம்மையெல்லாங்
கொடாதவ ர்க்கு மிதுவேபெத் தாச்சி கொடைக்குணமே. (16)

---

* மிடுக்கிலாதானைவீமனேவிறல்விசயனேவில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப்பாரியேயென்றுகூறினுங்கொடுப்பாரில்லை [காள்
பொடிக்கொண்மேனியெம்புண்ணியனெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்
அடுக்குமேலமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.—அப்பர்.

† வம்மின்புலவீர்நும்மெய்வருத்திக்கைசெய்துய்ம்மினோ
இம்மண்ணுலகிற்செல்வரிப்போதில்லைநோக்கினோம்
நும்மின்கவிகொண்டுநும்நும்இட்டதெய்வமேத்தினாற்
செம்மின்சுடர்முடியெந்திருமாலைச்சேருமே.—சடகோபர்.

‡ இச்செய்யுள் ஒகாரஈறாய்வந்தது. திருவிருத்தம் 40-வது பாசுரம்
'என்று கொலோ' என ஒகாரஈறாய் முடிந்திருத்தல் காண்க.

வெண்பா.

கொடைபெரிய வாயிற் குணம்படைத்துப் பெற்றான்
அடைபெரிய பெத்தாச்சி யாம்பேர்—கொடைபெரியோர்
தன்மமெனக் கொண்டான் றருமம்மைக் கென்னுய்
இன்பமெனக் கொண்டா னிவன். (17)

கொடையாற் பெரிய ஆய் என்னும் வள்ளலினும் மேம்பட்ட சிறந்த குணத்தைப் படைத்ததனாலே பெரிய என்னும் பொருளைத்தரத்தக்க 'பெத்த' என்ற விசேஷணத்தோடுகூடிய பெத்தாச்சி யென்னும் பெயரைப் பெற்றான்; இம்மைச்செய்தது மறுமைக்குப் பயன்தரும் என்ற நோக்கத்தோடு செய்யாமல், அந்த ஆய் என்பவன், கொடை பெரியோர் தன்மமெனக் கொண்டான்; இப்பெத்தாச்சி கொடை இன்பந் தருவதெனக் கொண்டான் எனப் பொருள் காண்க. கடமையென்று எண்ணிக்கொடுத்தவனினும் இன்பமென்று எண்ணிக்கொடுப்பவன் உயர்ந்தவனுமென்பது கருத்து.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனு
மறவிலை வாணிக னாஅ யல்லன்
பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
வாங்குப் பட்டன் றவன்கை வண்மையே.—புறநானூறு.

கட்டளைக்கலித்துறை.

இவனுந் தமிழ்க்கவி கேட்டளிப் பானென் றிரக்கினந்தச்
சிவனும் புகழ்மிகு *பாணர்க்குத் தந்த திறத்தினின்சீர்
கவனஞ் சுவைபெறச் செய்துபெத் தாச்சிதன் கைக்கொடுத்தால்
அவனுந் தருவனென் றேதரு வானே ரருங்கவியே. (18)

---

* மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யா மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க,
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.—திருமுகப்பாசுரம்.

வெண்பா.

சவிச்செல்வப் பெத்தாச்சிக் கற்பகமா மெங்கள்
செவிச்செல்வன் ருனிருக்கச் சென்ருேர் — புவிச்செல்வர்
புன்மை மறைத்துரைத்துப் பொய்க்குணங்கள் கற்பித்து
நன்மை பெறவிரும்போம் நாம். (19)

கட்டளைக்கலித்துறை.

நாமென்று செல்வச் செருக்கர்சொல் வார்த்தையை நாவலவர்
தாமின்று சொல்லுந் தரத்திலன் ஞேரைப்பெத் தாச்சிவைத்தான்
ஆமென்று நாலைந் தெழுத்தினைக் கற்றவ ராயினுநீர்
போமென்று சொல்லா துவந்தவர் மீதினும் பொன்பொழிந்தே. (20)

வாழ்த்து.

பங்கயச் செல்வியு மங்கயற் கண்ணியும் பாரதியுந்
தங்கடைக் கண்ணருள் செய்திடப் பெற்றபெத் தாச்சிமன்னன்
பொங்கிய வாழ்வுக ளெல்லாம் பொருந்தியிப் பூதலத்தில்
மங்கள மாகப்பல் லாண்டுபல் லாண்டுகள் வாழியவே.

ஸ்ரீ:

நவமணிமாலை.

காப்பு.

சீரார் சிவமணியாய்ச் செல்வர் சிகாமணியாய்ப்
பேரார்சிந் தாமணியாம் பெத்தாச்சிக்—கோரார்
நவமா மணிமாலை நான்புனைவேன் வானோர்
தவமா மணிமாலைத் தாழ்ந்து.

நூல்.

கட்டளைக்கலித்துறை.

தென்கொண்ட பாண்டிகா னாடுகோத் தான்,சென்னி தேசநள்ளார்
வென்கொண்ட தென்னூர், கருவூரச் சேர விடயமிந்த
மன்கொண்ட மூந்நகர் கொண்டுபெத் தாச்சிநம் வள்ளல்வந்தான்
பொன்கொண்ட மூவேந் தவதார மாத்தமிழ் போற்றுதற்கே. (1)

சென்னிதேசம்-சோழநாடு. நள்ளார்வென்கொண்ட-பகைவரை முதுகு காட்டியோடச்செய்த. விஷயம்-நாடு.

தனமும் படைத்துத் தரையும் படைத்துச் சமீனெனும்பேர்க்
கனமும் படைத்துக் கவினும் படைத்துக் கலைபடைத்தார்க்
கனமும் படைத்தவ ரூண்டுபெத் தாச்சியைப் போலலர்ந்த
மனமும் படைத்தவ ரூண்டுகொ லோவிம் மகிதலத்தே. (2)

* தூசி யிடாத வுலோபியர் தங்களைத் தூக்கிவைத்துப்
பேசி யடாத கவிகள்சொன் னேனுன் பெருமைகண்டும்
ஆசி சொலாமற் கவிகள்சொல் லாம லடங்கவென்வாய்
ஊசி கொடாதைத் துளதுபெத் தாச்சிநல் லுத்தமனே. (3)

எனக்கே தருக பெருஞ்செல்வ மீச! வெனக்களிக்க
நினக்கே மனமில்லை யாயிரந் துய்ய நினைந்தனையேல்
† வனக்கே தனந்தன்ம மானபெத் தாச்சி வரோதயமால்
தனக்கே தருகவென் வாயாரப் பாடித் தனம்பெறவே. (4)

---

* பிரபு அவர்கள் தம்மீது ஒருபாட்டுக்கதிகஞ் சொல்லவேண்டாமென்று கட்டளையிட்டபோது சொன்ன பாடல் இது.

† தர்மத்தை அழகிய கொடியாகக்கொண்ட. வனம் - அழகு. கேதனம் - கொடி.

சொல்லிற் கனக மணிவைத் தொருகவி சொல்லுமவர்
இல்லிற் கனக மணிவைத் தருள்பவ னெங்கெழிற்றோள்
அல்லித் திருவைப் பொருந்துபெத் தாச்சி யதிகனல்லால்
நெல்லிக் கனிதந் தவனோ வதிகனிந் நீணிலத்தே. (5)

கூபந் தருங்குளந் தானுந் தரும்புனற் கொண்டலைப்போற்
றூபந் தணியத் தருமோ தருமபெத் தாச்சியைப்போல்
கோபந் தெரியாக் குளிர்முகத் தோடு கொடுப்பவரித்
தீபந் தனிலுள ரோவிரல் விட்டெண்ணிச் செப்புதற்கே. (6)

வட்டிக் கணக்கைப் பெருக்கவும் பார்க்கும் வணிகர்குலச்
செட்டிப் பிறப்பிற் பிறந்தபெத் தாச்சித் திவாகரநின்
பெட்டிக் கணக்சர் குறிக்கவொட் டாமற் பெருநிதியங்
கொட்டிக் கொடுக்குங் குணமெங் கிருந்து குதித்திட்டதே. (7)

கொஞ்சங் கொடுப்பர் சிலரவர் தாமுங் கொடுத்தபின்னர்
நெஞ்சந் தவிப்ப ருவந்துபெத் தாச்சி நிருபனைப்போல்
பஞ்சந் தணியக் கொடுப்பாரை யானெங்கும் பார்த்ததில்லை
வஞ்சங் களைந்த மனத்தோடு சொல்கின்ற வார்த்தையிதே. (8)

திருவூர் புலவர் சிகாமணி யாகித் திகழுமுன்னைக்
கருவூர் விழவிற் கவிசொல்லி யேத்திய கற்றவர்க்கு
மருவூ ரயலொரு மாந்தரைப் பாட மனம்வருமோ
உருவூர் மதனென வுற்றபெத் தாச்சியென் னுத்தமனே. (9)

வாழ்த்து.

ஞால மலர்மடந்தை நாதன் றிருவருளால்
பாலர் பலருடனே பல்லூழி—காலம்
அரோகதிட காத்திரனா யன்புறுபெத் தாச்சி
வரோதயநீ வாழ்க மகிழ்ந்து,